# பதவி வெற்றிடங்கள் அறிவித்தல்

அநுராதபுரம் மாநகர சபையில் இருக்கும் கீழ் தரப்பட்டுள்ள பதவிகளுக்காக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புக்கு தகுதி பெற்ற விண்ணப்பதாரர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. ஆட்சேர்ப்புக்கான பதவிகள்:**

1. படவரைஞர்
2. பணி நிர்வாகி
3. தொழில்நுட்ப அதிகாரி (கணிய அளவையாளர்)
4. ஓட்டுநர் (டிரக்டர்)

**02. ஆட்சேர்ப்பு தகைமைகள்:**

**1. படவரைஞர்**

**1. கல்வித் தகைமை:**
பிரயோன கணிதம்/ தூய கணிதம்/ இணைந்த கணிதம் மற்றும் பௌதீக விஞ்ஞானம்/ பொறியியல் தொழில்நுட்பவியல் மற்றும் தொழில்நுட்பவியலுக்காக விஞ்ஞானம் உட்பட விஞ்ஞானம்/ கணிதம்/ தொழில்நுட்பவியல் பாடப் பிரிவில் மூன்று பாடங்களில் கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் சித்தி பெற்றிருத்தல். மற்றும் சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

**2. தொழில் தகைமைகள்:**
தொழில்துறையுடன் தொடர்புபட்ட தேசிய தொழில் தகைமை (NVQ 6) அளவிலான தகைமையை பூர்த்தி செய்திருத்தல் அல்லது மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப கல்லூரி ஒன்றில் படவரைஞர் தொடர்பில் ஓர் ஆண்டு முழு நேர பயிற்சி கற்கை ஒன்றை வெற்றிகரமாக நிறைவு செய்து சான்றிதழ் பெற்றிருத்தல் அல்லது உயர் கல்வி அமைச்சு மற்றும் மேல் குறிப்பிடப்பட்ட தொழில்நுட்ப சான்றிதழை வழங்கும் நிறுவனங்களில் விசாரித்து கருத்தைப் பெற்ற பின் கீழ் குறிப்பிடப்பட்ட தொழில்நுட்ப தகைமைகளுக்கு அனைத்து வகையிலும் பொருத்தமானது என மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு தொழில்நுட்ப தகைமையை பெற்றிருத்தல்.

**3. வயதெல்லை:**
18 க்கும் 35 வயதுக்கும் இடையே வயதெல்லை கருத்திற் கொள்ளப்படும்.

**4. சம்பள அளவு:**
வட மத்திய மாகாண அரச சேவை தொழில்நுட்ப சேவையின், சேவை யாப்பின் III ஆம் தரத்திற்காக அரச நிர்வாக சுற்றுநிருபம் 10/2025 இன் MN 3 சம்பள அளவின் ஆரம்ப சம்பளம் இந்தப் பதவிக்கு வழங்கப்படும்.

**5. ஒப்பந்த அடிப்படையில் இணைக்கப்படும் பதவிகளின் எண்ணிக்கை:**
**படவரைஞர் - பதவி – 1**

**1. பணி நிர்வாகி**

**1. கல்வித் தகைமை:**
சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் மேலும் இரு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் குறைந்தது ஒரு பாடத்திலேனு சித்தி பெற்றிருத்தல்

**2. தொழில் தகைமைகள்:**
தொழில்துறையுடன் தொடர்புபட்ட தேசிய தொழில் தகைமை (NVQ 3) அளவிலான தகைமையை பூர்த்தி செய்திருத்தல்.

**2. வயதெல்லை:**
18 க்கும் 35 வயதுக்கும் இடையே வயதெல்லை கருத்திற் கொள்ளப்படும்.

**3. சம்பள அளவு:**
வட மத்திய மாகாண அரச சேவை உள்ளூராட்சி நிறுவனங்களில் பணி நிர்வாக சேவை III ஆம் தரத்திற்காக அரச நிர்வாக சுற்றுநிருபம் 10/2025 இன் MN 1 சம்பள அளவின் ஆரம்ப சம்பளம் இந்தப் பதவிக்கு வழங்கப்படும்.

**4. ஒப்பந்த அடிப்படையில் இணைக்கப்படும் பதவிகளின் எண்ணிக்கை:**
பணி நிர்வாகி - பதவி – 02

**3. தொழில்நுட்ப அதிகாரி (கணிய அளவையாளர்)**

**1. கல்வித் தகைமை:**
துறை சார்ந்த இரு பாடங்களுடன் விஞ்ஞானம்/ கணிதம்/ தொழில்நுட்பவியல் பாடப் பிரிவில் மூன்று (03) பாடங்களில் கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் சித்தி பெற்றிருத்தல். மற்றும்

சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் இரண்டு தடவைக்கு மேற்படாது ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

**2. தொழில் தகைமைகள்:**
மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப கல்லூரி ஒன்றில் பதவிக்கு தொடர்புடைய துறையில் கற்கை ஒன்றை வெற்றிகரமாக பூர்த்தி செய்து தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் ஒன்றை பெற்றிருத்தல் (தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் சிவில்/ மின்/ இயந்திரவியல்) அல்லது

மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப கல்லூரி ஒன்றில் தொழில்நுட்ப வல்லுனர்களுக்கான தேசிய சான்றிதழ் கற்கை ஒன்றை வெற்றிகரமாக கற்று குறித்த சான்றிதழை பெற்றிருத்தல்.

உயர் கல்வி அமைச்சு மற்றும் மேல் குறிப்பிடப்பட்ட தொழில்நுட்ப சான்றிதழை வழங்கும் நிறுவனங்களில் விசாரித்து கருத்தைப் பெற்ற பின் கீழ் குறிப்பிடப்பட்ட தொழில்நுட்ப தகைமைகளுக்கு அனைத்து வகையிலும் பொருத்தமானது என மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு தொழில்நுட்ப தகைமையை பெற்றிருத்தல்.

**3. வயதெல்லை:**
18 க்கும் 35 வயதுக்கும் இடையே வயதெல்லை கருத்திற் கொள்ளப்படும்.

**4. சம்பள அளவு:**
வட மத்திய மாகாண அரச சேவை தொழில்நுட்ப சேவையின், சேவை யாப்பின் III ஆம் தரத்திற்காக அரச நிர்வாக சுற்றுநிருபம் 10/2025 இன் MN 3 சம்பள அளவின் ஆரம்ப சம்பளம் இந்தப் பதவிக்கு வழங்கப்படும்.

**5. ஒப்பந்த அடிப்படையில் இணைக்கப்படும் பதவிகளின் எண்ணிக்கை:**
தொழில்நுட்ப அதிகாரி (கணிய அளவையாளர்) – பதவி - 01

**4. பணி நிர்வாகி**

**1. ஓட்டுநர் (டிரக்டர்):**
கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் இரண்டு தடவைக்கு மேற்படாது சிங்களம்/ தமிழ் மொழி உட்பட இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

**2. தொழில் தகைமைகள்:**
கனரக வாகனம் செலுத்துவது தொடர்பில் மோட்டார் வாகன ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட ஓட்டுநர் அனுமதிப் பத்திரத்தை பெற்றிருத்தல்.

வீதி சட்ட ஒழுங்குகள் பற்றி சிறந்த அறிவு இருத்தல் வேண்டும்.

கனரக வாகன ஓட்டுநராக மூன்று (03) ஆண்டுகள் அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும் என்பதோடு, அனுபவத்தை சான்றிதழ் உறுதி செய்தல் வேண்டும்.

**3. வயதெல்லை:**
18 க்கும் 35 வயதுக்கும் இடையே வயதெல்லை கருத்திற் கொள்ளப்படும்.

**4. உடல் தகைமை:**
அனைத்து அபேட்சகர்களும் பகல் நேரம் மற்றும் இரவு நேரத்தில் பணியில் ஈடுபடுவதற்காக உடல் ரீதியில் தகுதி பெற்றிருத்தல் வேண்டும் என்பதோடு, நன்றாக கண்கள் தெரியக் கூடியவராக இருத்தல் வேண்டும். அரச வைத்திய அதிகாரியினால் வழங்கப்பட்ட முறையான சான்றிதழ் ஒன்றின் மூலம் அது பற்றி உறுதி செய்தல் வேண்டும். குறைந்தபட்ச உயரம் 5 அடி 2 ½ அங்குலம் இருத்தல் வேண்டும்.

**5. சம்பள அளவு:**
வட மத்திய மாகாண அரச சேவை மோட்டார் வாகன ஓட்டுநருக்கான சேவை யாப்பின் III ஆம் தரத்திற்காக அரச நிர்வாக சுற்றுநிருபம் 10/2025 இன் PL 3 சம்பள அளவின் ஆரம்ப சம்பளம் இந்தப் பதவிக்கு வழங்கப்படும்.

**6. ஒப்பந்த அடிப்படையில் இணைக்கப்படும் பதவிகளின் எண்ணிக்கை:**
ஓட்டுநர் – பதவி – 04

பொது நிபந்தனைகள்:

**04. உடல் தகைமை**
அனைத்து அபேட்சகர்களும் வட மத்திய மாகாணத்தில் எந்த ஒரு இடத்திலும் பணியாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் பொருத்தமான உடல் மற்றும் உள தகைமையை பெற்றிருத்தல் வேண்டும்.

**05. வேறு தகைமைகள்**
விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதிக்கு, முந்தைய மூன்று (03) ஆண்டுகளுக்கு வட மத்திய மாகாணத்திற்குள் நிரந்தர வதிவிடத்தை பெற்றவராக இருத்தல் வேண்டும். வதிவிடத்தின் கிராம உத்தியோகத்தரினால் வழங்கப்பட்ட சான்றிதழ் அடிப்படையில் குறித்த பிரதேச செயலாளரினால் கையொப்பம் இட்டு வழங்கப்பட்ட ஆவணம் ஒன்றின் மூலம் வதிவிடத்தை உறுதி செய்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை ஏற்கும் இறுதித் திகதிக்கு அனைத்து தகைமைகளையும் அனைத்து வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**06. ஆட்சேர்ப்பு முறை:**
விண்ணப்பங்களை பரீட்சித்த பின்னர் தகுதி உள்ள விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து கல்வி மற்றும் வேறு தகைமைகளை பரீட்சித்த பின்னர் தகைமை பெற்றவர்கள் பதவிக்கு நியமிக்கப்படுவர்.

**07. விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்:**
இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பங்களை சரியாக மற்றும் தெளிவாக தமது கையொப்பத்தில் பூர்த்தி செய்தல் வேண்டும். A4 அளவான காகிதங்களில் விண்ணப்பப் படிவத்தை தயாரித்தல் வேண்டும். விண்ணப்பங்களை 2025.09.16 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்குமாறு மாநகர ஆணையாளர், மாநகர சபை, அநுராதபுரம் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும் என்பதோடு, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும்.

08. முறையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் மற்றும் அடிப்படை தகைமைகளை பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் எந்த ஒரு அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

09. இந்தப் பதவிக்காக நியமிப்பது அல்லது நியமிக்காதது அல்லது வெற்றிட எண்ணிக்கை தொடர்பில் இறுதி முடிவு அநுராதபுரம் மாநகர சபையின் மாநகர ஆணையாளர் வசமானது.

10. மேலுள்ள பதவிக்காக நியமிக்கப்படுவது ஒப்பந்த அடிப்படையில் மாநகர சபையினால் தீர்மானிக்கப்படுகின்ற காலத்திற்கு மாத்திரமாகும்.

11. சேவை தேவை அடிப்படையில் அந்த ஒப்பந்தக் காலத்தை நீடிப்பது அல்லது குறைக்க முடியும்.

**மாநகர ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**அநுராதபுரம்.**

**2025.08.25 அன்று**
**அநுராதபுரம் மாநகர சபை**
**அலுவலகத்தில்.**

(அலுவலக பயன்பாட்டுக்கு)

**மாதிரி விண்ணப்பப் படிவம்**
**அநுராதபுரம் மாநகர சபையின் ............. பதவிக்காக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு**

01. முழுப் பெயர்: ...........................................................................
02. தனிப்பட்ட முகவரி: .....................................................................
03. தேசிய அடையாள அட்டை இலக்கம்: ..................................................
04. பிறந்த திகதி: ........................................
05. 202 ........ திகதிக்கு வயது: ........................
06. தொலைபேசி இலக்கம்: கைபேசி: நிலையானது:
07. கல்வித் தகைமை:

க.பொ.த. (சா.தரம்)

| | பாடம் | சித்தி |
|---|---|---|
| 01. | ............................. | ................ |
| 02. | ............................. | ................ |
| 03. | ............................. | ................ |
| 04. | ............................. | ................ |
| 05. | ............................. | ................ |
| 06. | ............................. | ................ |
| 07. | ............................. | ................ |
| 08. | ............................. | ................ |

க.பொ.த. (உயர் தரம்)

| | பாடம் | சித்தி |
|---|---|---|
| 01. | ............................. | ................ |
| 02. | ............................. | ................ |
| 03. | ............................. | ................ |
| 04. | ............................. | ................ |

08. தொழில் தகைமை: ...........................................................
09. அனுபவம்: ...................................................................
10. விண்ணப்பதாரர் உறுதிமொழி:
மேல் பெயர் குறிப்பிடப்பட்ட என்னால் இந்த விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் தகவல்கள் எனது அறிவு மற்றும் நம்பிக்கைக்கு அமைய உண்மையானது மற்றும் சரியானது என உறுதி செய்கிறேன். என்னால் வழங்கப்பட்டிருக்கும் தகவல்கள் பொய்யானது என்பது கண்டறியப்பட்டால் நான் விண்ணப்பித்திருக்கும் மேலுள்ள பதவிக்கு நியமிப்பதற்கான எனது உரிமையை பொருட்படுத்தாமல் இருக்க முடியும் என்பதும் தெரியும்.

**திகதி:** ..................

........................
**கையொப்பம்**